*30*

# நரகத்தின் முன்சுவை

## (9:12-19)

*நமது முந்திய பாடத்தில் நாம், பயங்கரமான "வெட்டுக்கிளி-குதிரை - தேள்-மனித கலப்பினங்கள்"[1] பூமியின்மீது கட்டவிழ்த்து விடப்பட்டதைக் கண்டோம். மனிதகுலத்தை அவைகள் வாதித்தது மனிதகுலத்தின் மாற்றத்திற்கான செயல்விளைவு எதையும் ஏற்படுத்தவில்லை, ஆனால் தேவன் இன்னமும் தமது கிரியையை முடிக்கவில்லை. தேவன் மக்களைத் தம்மிடத்தில் திரும்பக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஒவ்வொரு வழிமுறையையும் பயன்படுத்த முடிவு செய்தார் (செய்கின்றார்). இவ்விதமாக 9:12ம் வசனம், ''முதலாம் ஆபத்து கடந்துபோயிற்று, இவைகளுக்குப்பின்பு இன்னும் இரண்டு ஆபத்துக்கள், இதோ, வருகிறது" என்று அறிவிக்கிறது (8:13ஐக் காணவும்). "முதலாம் ஐயோ" என்பது ஐந்தாம் எக்காளத்தினால் அறிவிக்கப்பட்ட வாதிக்கும் வெட்டுக்கிளிகளைக் குறித்தது. அடுத்த ஐயோ என்பது இந்தபாடத்தின் கருத்துப்பொருளாய் இருக்கும்: ஆறாம் எக்காளம் ஊதப்பட்டபோது தோன்றிய தூதர்கள்/ சேனை. மூன்றாம் மற்றும் கடைசி ஐயோ என்பது கர்த்தர் மறுபடியும் வருகிறபோது தொனிக்கும் கடைசி எக்காளமாய் இருக்கும் (11:15-19).*

*ஏழு எக்காளங்களைப் பற்றிப் படிப்பதில் நாம் ஒரு வளர்நிலையைக் கண்டுள்ளோம்: பாவமானது பொதுவாக வாழ்வில் ஏற்படுத்தும் அலங்கோலங்களை, முதல் நான்கு எக்காளங்கள் சுட்டிக்காண்பித்தன. பாவம் வாதிக்கிறது. மற்றும் துன்புறுத்துகிறது என்பதை ஐந்தாம் எக்காளம் அறிவித்தது. ஆறாம் எக்காளத்தைப் பற்றி நாம் படிக்கையில், பாவம் பெரும்பாலும் மரணத்தை விளைவிக்கிறது என்பதை நாம் காண்போம். பாவம் என்பது பாவியைத் துன்புறுத்துவது மட்டுமின்றி மற்றவர்களையும் பாதிக்கிறது என்பதை வலியுறுத்துவோம்.*

### *பலிபீடத்தில் இருந்து வந்த சத்தம் (9:13)*

*ஆறும் தூதன் தனது எக்காளத்தை ஊதியபோது, யோவான் "தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து[2] ஒரு சத்தந்தோன்றி"யதைக் கேட்டார் (வசனம் 13). 8:3ல் நாம் பொற்பீடத்தைப் பற்றி வாசித்தோம். அந்தப் பீடத்தின்மீது, பரிசுத்தவான்களின் ஜெபங்களோடும் தூபவர்க்கம் சேர்க்கப்பட்டது. அந்த ஜெபங்களுக்குப் பதில்செயலாக, அந்தப் பீடத்திலிருந்து நெருப்பானது விசுவாச முள்ளவர்களை பலிவாங்கும்படி பூமியின்மீது கொட்டப்பட்டது.*

பொற்பீடத்தைப் பற்றிய மறு அறிமுகமானது, தேவன் தமது மக்களின் வேண்டுதல்களைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளிக்கின்றார் என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாக உள்ளது.

"நான்கு கொம்புகளிலுமிருந்து தோன்றிய சத்தத்தின்" ஆதாரமூலம் பற்றி நமக்குக் கூறப்படுவதில்லை. 16:7ல் பலிபீடமே பேசிற்று, இவ்விடத்திலும் விஷயம் அதுவாகவே இருக்கலாம். பீடமானது "தேவனுக்கு முன்பாக" இருந்தது என்பதே குறிப்பிடத்தக்க விஷயமாக உள்ளது. கொம்புகளில் இருந்து வந்த வார்த்தைகள் ஒரு தெய்வீகக் கட்டளையாக இருந்தன.

## ஐபிராத்தில் இருந்த தூதர்கள் (9:14-16அ)[3]

அந்தச் சத்தமானது, (எக்காளத்தை) ஊதிய தூதனிடத்தில், "ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு" என்று கூறிற்று (வசனம் 14).[4] அந்த அறிவுறுத்தல்கள் செயல்படுத்தப்பட்டன: "அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப் பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்" (வசனம் 15).

வசனங்கள் 14லும் 15ம், ஆர்வமிக்க பல விபரங்களைக் கொண்டுள்ளன:

(1) எங்கே என்ற அம்சம் ஒன்றுள்ளது: தூதர்கள் "ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருந்தனர்." பிற்பாடு ஆறாம் கலசமானது "ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல்" ஊற்றப்படும் (16:12), எனவே இடம் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

ஐப்பிராத்து என்பது யூதர்களைப் பொறுத்தமட்டில் விசேஷித்த அர்த்தம் கொண்டதாக இருந்தது: அது ஏதேன் தோட்டத்தில் பாய்ந்தோடி வந்த நான்கு நதிகளில் ஒன்றாக இருந்தது (ஆதியாகமம் 2:10, 14) - அந்த ஏதேன் தோட்டம் மனிதனின் முதல் இல்லமாக, மனிதன் முதன்முதலில் பாவம் செய்த இடமாக (ஆதியாகமம் 3) இருந்தது. அது ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பின்பு ஆபிரகாமின் சந்ததியாருக்குக் தரப்பட்ட நாட்டின் வடக்கு எல்லையாக இருந்தது (ஆதியாகமம் 15:18; யாத்திராகமம் 23:31; 1 இராஜாக்கள் 4:21). அத்துடன் கூடுதலாக, அந்த நதியானது அபாயத்தின் நிலைத்த ஆதாரமுலமாக இருந்திருந்தது, ஏனெனில் அவர்களின் பலம்வாய்ந்த விரோதிகள் நதியின் மறுபக்கத்தில் (தாக்குவதற்குப்) பதுங்கியிருந்தனர். ஐப்பிராத்து நதியானது, இஸ்ரவேல் மக்களை அவர்களின் பாவங்களுக்காகத் தண்டிப்பதாகத் தேவன் விடுத்த அச்சுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டது (ஏசாயா 8:5-8; எரேமியா 46:10ஐக் காணவும்). கடைசியில் அசீரியர்களும் பாபிலோனியர்களும் ஐபிராத்து நதியைக் கடந்து வந்து, வடக்கு மற்றும் தெற்கு இராஜ்யங்களை சிறைப்பிடித்துச் சென்றனர் - இது யூதர்களின் மாபெரும் சிறுமையாய் இருந்தது.

ஐபிராத்து நதி ரோமாபுரிக்கும் விசேஷித்த தனிச்சிறப்பு உடையதாயிருந்தது: அந்த நதியின் மறுபுறத்தில், ரோமப்பேரரசின்

எல்லைகளின்மீது, விளைவின் ஒரே இராணுவ வல்லமையான பார்த்தியா என்ற நாடு இருந்தது. பார்த்தியர்கள், உலகிலேயே மிகவும் அஞ்சப்படத்தக்க குதிரைப் படைகளை கொண்டிருந்தனர். கி.மு. 53ல் பார்த்தியர்களின் கைகளில் இருந்து சிறுமையான தோல்வியை கிரேஸஸ் என்பவன் பெற்றபின்பு. "ஐபிராத் என்னும் பெரிய நதியை" கடந்து "சூரியன் உதிக்கும் திசையிலிருந்து வரும் ராஜாக்கள்" (16:12) என்ற கருத்தேகூட ரோமப் படைத்தலைவனின் முதுகெலும்பில் சில்லிப்பை அனுப்பப் போதுமானதாக இருந்தது.

ரே சம்மர்ஸ் அவர்கள், ரோமப் பேரரசைத் தூக்கியெறிய ஒன்றிணைந்த மூன்று காரணிகளைக் குறிப்பிட்டார்: இயற்கைப் பேரழிவு, உள்ளான சிதைவு மற்றும் வெளியிலிருந்து படையெடுப்பு. அவர், முதல் நான்கு எக்காளங்கள் இயற்கைப் பேரழிவை உள்ளடக்கின என்று குறிப்பிட்டு, ஐந்தாம் எக்காளத்தின் வெட்டுக்கிளிகள் உள்ளான சிதைவை குறித்தன என்று முன்மொழிந்தார். இவ்விதமாக அவர், ஆறாம் எக்காளமானது மூன்றாவது காரணியின் அடையாளத்துவக் குறிப்பாக உள்ளது என்று அறிவித்தார்.[5] இது இவ்வசனப் பகுதியில் இருந்து ஏற்படுத்தப்படக்கூடிய நடைமுறைப் பயன்பாடாக உள்ளது.

இருப்பினும் நாம். இந்த மொழிநடையானது நேரடி அர்த்தம் கொண்டதல்ல, இது அடையாளத்துவமானதாக உள்ளது என்பதைச் சிந்தையில் கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் [யோவான்], பாவத்தின் காரணமாக உடனடியாக ஏற்பட்ட அபாயம் - அதாவது அருகாமையில் பதுங்கியிருந்த அபாயம் - பற்றிய பொதுவான கருத்தை ஏற்படுத்துகையில், குறிப்பிட்ட புவியியல் சார்ந்த இடத்தையும் படையெடுத்து வரும் குறிப்பிட்ட சேனையையும் அதிகமாகத் சிந்தையில் கொண்டிருக்கவில்லை. ஐப்பிராத்து நதிக்கு அப்பால் இருந்த சேனையானது, "மனித சேனைகளான மற்ற எதைக்காட்டிலும் அதிகம் பயங்கரமானதாக இருந்தது. அது இயல்புக்கு மேலான ஆற்றல் உள்ளதாக, உண்மையில் நரகம் சார்ந்த ஒரு சேனையாக இருந்தது."[6]

(2) எப்பொழுது என்பது பற்றிய விபரம் ஆலோசனைக்குரியதாக உள்ளது: நான்கு தூதர்களும், "ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும்" ஆயத்தமாக்கப்பட்டிருந்தனர் (வசனம் 15அ). "ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும்" என்ற சொற்றொடரானது, குறிப்பிட்ட காலத்தை - "தேவன் தமது சிந்தையில் நியமித்திருந்த காலத்தை"[7] - குறித்துப் பேசக்கூடியதன் நாடகத்துவமான வழிமுறையாக இருந்தது. NIV வேதாகமத்தில், "this very hour and day and month and year" என்றுள்ளது. SEB வேதாகமத்தில், "this *exact* hour of this *exact* day of this *exact* month of this *exact* year" என்றுள்ளது.[8] தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதே இவ்வசனத்தின் செய்தியாக உள்ளது. அவரது கால அட்டவணை அவருக்கு மாத்திரமே தெரிந்ததாக உள்ளது (நடபடிகள் 1:7ஐக் காணவும்) - ஆனால் ஏற்ற காலத்தில், அவரது திட்டங்கள் செயல்படுத்தப்படும். அவரது மக்கள் அதைக் குறித்து நிச்சயமாக இருக்க முடியும்!

*(3) ஏன் என்பது பற்றிய விபரம் ஒளிவுமறைவானதாகவும் தொல்லைப்படுத்துவதாகவும் உள்ளது: தூதர்கள், ''மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ... அவிழ்த்துவிடப்பட்டார்கள்'' (வசனம் 15ஆ). மனிதர்களை மரணத்திற்கு உட்படுத்துதல் என்ற குறிப்பிட்ட நோக்கம் கொண்ட எக்காளம் ஒன்றை நாம் முதன்முறையாக காண்கின்றோம். முதல் நான்கு எக்காளங்கள், இயற்கையான உலகத்தை நோக்கி இயக்கப்பட்டன, அவற்றினால் மக்கள் மறைமுகமாக மாத்திரம் பாதிக்கப்பட்டனர். ஐந்தாம் எக்காளம் மனிதகுலத்தை இலக்காகக் கொண்டிருந்தது, ஆனால் வெட்டுக்கிளிகளுக்கு, "அவர்களைக் கொலை செய்யும்படிக்கு ... உத்தரவு கொடுக்கப்படாமல்" இருந்தது (9:5அ). இதற்கு நேர்மாறாக, மனிதகுலத்தின் மூன்றில் ஒரு பங்கினரை நிர்மூலமாக்குதல் என்பது ஆறும் எக்காளத்திற்குத் தெளிவாக அறிவிக்கப்பட்ட நோக்கமா யிருந்தது.*

*மீண்டும் ஒருமுறை, நியாயத்தீர்ப்பு ஒருபகுதியானதாகவே இருந்தது: மனிதகுலத்தின் முழுமையும் அழிக்கப்படவில்லை, ஆனால் மூன்றில் ஒருபகுதி ''மாத்திரமே'' அழிக்கப்பட்டது.[9] மனிதகுலத்தின் மூன்றில் இரண்டு பகுதி தாக்கப்படாமல் நிலைத்திருந்தது (9:20அ). இந்த மூன்றில் இரண்டு பகுதி மக்கள் மீதுதான் தேவன் அக்கறை கொண்டிருந்தார், இவர்கள் மனந்திரும்புவார்கள் என்று தேவன் நம்பிக்கையாய் இருந்தார்.*

*(4) யார் என்பது இவ்வசனப் பகுதியில், மிகவும் கலக்கத்தை ஏற்படுத்தும் அம்சமாக உள்ளது: "நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு ... அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்" (வசனங்கள் 14ஆ, 15அ). இவர்கள், அழிவின் நான்கு காற்றுகளையும் பிடித்து வைத்துக் கொண்டிருந்த அந்த நான்கு தூதர்களாகவே இருந்தனரா (7:1),[10] அல்லது இவர்கள் "நல்லவர்களாக" அல்லது "தீயவர்களாக" இருந்தனரா என்பது பொருட்படுத்தப்படாததாக உள்ளது. அவர்கள் யாராக இருந்தாலும் அல்லது எவ்வகைப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் தேவனால் கட்டுப்படுத்தப்பட்டனர் மற்றும் அவரது கட்டளையை நிறைவேற்றினர். அவர்கள் நான்கு தூதர்களாய் இருந்தனர் என்ற உண்மையானது, அவர்களின் செயல் பூமிமுழுவதையும் நோக்கி இயக்கப்பட வேண்டியிருந்தது என்பதை மாத்திரம் குறிக்கிறது.[11]*

*நாம் அடுத்த வசனத்தை வாசிக்கும்போது "யார்" என்பது பற்றிய கலக்கத்தை ஏற்படுத்தும் பகுதி வருகிறது. தூதர்கள் ஒரு விசேஷித்த பணிப்பொறுப்பை நிறைவேற்ற ஆயத்தமாக்கப்பட்டிருந்தனர். இப்போது அவர்களுக்கு கட்டளைகள் தரப்பட்டு, அவிழ்த்துவிடப்பட்டனர். தூதர்கள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையைச் செயல்படுத்துதல் பற்றி வாசிக்க நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்குப் பதில், "குதிரைச் சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது" (வசனம் 16அ) என்று நமக்கு கூறப்படுகிறது. குதிரைச் சேனைகள்? இந்தக் குதிரைச்சேனைகள் எங்கிருந்து வந்தனர்? தூதர்களுக்கு என்னவாயிற்று? நான்கு தூதர்களும் காட்சியில் இருந்து மறைகின்றனர், இவர்களைப் பற்றி மீண்டும் ஒருக்காலும் குறிப்பிடப்படுவதில்லை.*

*இந்த நான்கு தூதர்களும், குதிரைவீரர்களின் சேனைக்குப் பொறுப்பாளர்களாய் இருந்தனர் என்றும் இவர்கள் அந்தத் சேனையை ஐப்பிராத்து நதியை கடந்து செல்லும்படி வழிநடத்தினர் என்றும் பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் யூகிக்கின்றனர். அவ்வாறு இருக்கலாம், ஆனால் வசனப் பகுதியில் அப்படி எதுவும் சுட்டிக் காண்பிக்கப்படவில்லை. தரிசனங்களின் கனவுபோன்ற பண்பைச் சிந்தையில் வைத்துக்கொண்டு, நான் இன்னொரு சாத்தியக்கூறை முன்வைக்க என்னை அனுமதியுங்கள். "மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு" தூதர்களுக்கு கட்டளை தரப்பட்டிருந்தது (வசனம் 15), ஆனுல் அந்தக் கட்டளையை நிறைவேற்றியது யார்? அந்தக் குதிரை வீரர்களும் அவர்களுடைய போர்க் குதிரைகளும் தான் (9:18). ஆகையால் பின்வரும் கருத்தை ஏற்படுத்த என்னை அனுமதியுங்கள்.*

*தூதர்கள் = சேனை*
*மற்றும்*
*சேனை = தூதர்கள்*

*இராபர்ட் முல்ஹாலன்ட் அவர்கள், "தரிசன அனுபவத்திற்கு மிகவும் பொதுவானதாக இருக்கிறதான உருவகத்தின் ஏற்ற இறக்கங்கள் ஒன்றில் இந்த நான்கு தூதர்களும் திடீரென்று குதிரை வீரர்களின் மாபெரும் சேனையாக ஆயினர்" என்று எழுதினார்.*[12] *நவீன திரைப்படத் தயாரிப்பு,* "morphing" *என்ற விசேஷித்த செயல் விளைவைப் பயன்படுத்துகிறது.* "Morphing" *என்பது, ஒரு நபர் (அல்லது பொருள்) காட்சியில் இன்னொருவராக (அல்லது இன்னொரு பொருளாக) மென்மையாக மாற்றம் அடையச் செய்கிற தொழில் நுட்பமாகும்.*[13] *அதிகாரம் 9ன் பிற்பகுதியில் நாம் இந்தக் காட்சியைச் சித்தரிக்கையில், நமக்கு முன்பாகப் பெரியதொரு சேனை நிற்கும் வரையிலும் அனேகமாக நாம், தூதர்களின் மங்குதல் ஒளி, நெகிழ்ச்சி மற்றும் மாற்றம் என்ற வடிவத்தை ஒருவேளை காணவேண்டியிருக்கும்.*

## *"நரகத்தில் இருந்து வரும் குதிரை வீரர்கள்" (9:16-19)*

*அது "நரகத்தில் இருந்து வரும் குதிரைவீரர்கள்" முன்னோக்கிப் பாய்வதற்கான வேளையாக இருந்தது. ("நரகத்திலிருந்து குதிரைவீரர்கள் (மற்றும் குதிரைகள்)" என்ற விளக்க படத்தைக் காணவும்.) யோவான் "அக்கினியைச் சுவாசமாக வெளியிடுகிற, பாம்புகளை வால்களாகக் கொண்டிருந்த இருபது கோடிக் குதிரைகள் மெசப்பொத்தாமியாவில் இருந்து பாய்ந்தோடி வந்தன" என்று சித்தரிக்கையில் அவர் தமக்கு தாமே செயலற்றுப் போயிருந்தார்.*

*அப்போஸ்தலர் முதலில், "குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது" என்று எடுத்துரைத்தார் (வசனம் 16அ).*

இது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள பெரிய எண்ணிக்கைகளில் ஒன்றாக இருக்கிறது. ''வரிசைமுறையான வடிவமைப்பில் இது ஒரு மைல் அகலமும் எண்பத்து ஐந்து மைல்கள் நீளமும் கொண்ட குதிரைப் படையாக இருக்கும்!''[15] யோவான் 144,000 (7:4) பேர்களைக் கண்டபோது இருந்ததைப் போலவே, இப்படிப்பட்ட பெருந்திரளை எண்ணிக்கணக்கிடுதல் என்பது, அவருக்குச் சாத்தியமற்றதாக இருந்திருக்கும், அவர் "அவைகளின் தொகையைச் சொல்லக்கேட்டேன்" என்று எழுதினார் (9:16ஆ). அவருக்கு யாரோ ஒருவர் (ஒருவேளை ஒரு தூதன்), மொத்த எண்ணிக்கையைக் கூறினார்.

இந்த எண்ணிக்கையை நேரடி அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இது ஒரு தரிசனத்தில் காணப்பட்டது என்று அடுத்த வசனம் வலியுறுத்துகிறது. "இரண்டு" என்பது பலத்தைக் குறிப்பிடும் எண்ணாக இருக்கையில், ''பத்து'' என்பது அதினாலேயே [பத்தினாலேயே] பெருக்கப்படுகையில் வலிவூட்டப்பட்ட முழுமைத்துவத்தைக் குறித்து நிற்கிறது. இவ்விதமாக, "இருபதுகோடி" என்பது வெற்றிகொள்ளப்படக் கூடாத பலத்தைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட வரம்பு கடந்த எண் ஒன்றை ஏன் பயன்படுத்த வேண்டும்? ஜிம் மெக்குகன் அவர்கள், "விரோதியினிடத்தில் உயிரைப் பற்றி அச்சுறுத்த, பரிசுத்தவான்களின் தேவன் அப்படிப்பட்ட சேனையைத் தமது ஆணையின் கீழ் வைத்துள்ளார் என்பது பற்றி அவர்களை அகம்மகிழச் செய்ய நிலைகுலையச் செய்யும் கட்டுப்பாட்டைத் தேவன் உடமையாகக் கொண்டுள்ளார் என்பதை வலியுறுத்த" என்று பதில் அளித்தார்.[16] இவரது முதல் காரணத்தில் ஒரு சிறுமாற்றத்தை ஏற்படுத்த நான் விரும்புவேன்: "விரோதியின் பாவம்நிறைந்த தன்மை பற்றி அச்சுறுத்த'' பூமியில் குடியிருக்கிறவர்களை எச்சரித்து அவர்களை மனந்திரும்புதலுக்குள் கொண்டுவருதல் என்பது எக்காளங்களின் நோக்கங்களில் ஒன்றாக உள்ளது என்பதை நினைவில் வையுங்கள்.

எதிர்த்து நிற்கப்பட இயலாத இந்த சேனையின் தரிசனம், யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர்களை ஒழிப்பதற்குத் தேவையானதற்கு அதிகமாகவே ஆதாரமூலங்களைத் தேவன் கொண்டிருந்தார் என்று அவர்களுக்கு [கிறிஸ்தவர்களுக்கு] அறிவித்தது. இது, பாவம் என்பது நாடுகளுக்கும் தனிநபர்களுக்கும் பயங்கரமான மற்றும் மேலாதிக்கம் செலுத்துகிற விளைவுகளைக் கொண்டு வருகிறது என்று ஒவ்வொரு காலத்திலும் உள்ளவர்களுக்கு அறிவிக்கிறது!

சவாரி செய்தவர்களையும் அவர்களின் குதிரைகளையும் பற்றி விவரிக்க, யோவான் தயாராயிருந்தார். அவர் அவ்வாறு செய்வதற்கு முன்னர். "... நான் தரிசனத்தில் கண்டவிதமாவது'' என்று விளக்கினார் (வசனம் 17அ).

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே யோவான், தமக்கு வெளிப்படுத்துதல்கள் தரிசனத்தின் மூலம் தகவலாகத் தரப்பட்டன என்பதைத் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார். இந்தக் குறிப்பானது

"மேலெழுந்த வாரியான கூடுதல் தகவலாக" இருப்பதில்லை ... ஆனால் இது, அவரது விவரிப்புகள் இயல்பியல் உயர்வான அடையாளத்துவமாயிருக்கத் தகுதியானவைகள் என்பதைச் சுட்டிக்காண்பிப்பதாகும்.[17]

"குதிரைகளையும் அவற்றின்மீது அமர்ந்திருந்தவர்களையும்" பற்றி யோவான் தம்முடைய தரிசனத்தில் கண்டது என்ன? முதலாவது அவர், "அவர்கள் (the riders)[18] அக்கினிநிறமும்[19] நீலநிறமும் கந்தகநிறமுமான மார்க்கவசங்களையுடையவர்களாயிருந்தார்கள்" (வசனம் 17ஆ) என்பதைக் கண்டார். யோவானின் விவரிப்பினுடைய முழுச் செயல்தாக்கத்தையும் பெறுவதற்கு நீங்கள் பிரையன் வாட்ஸ் அவர்களின் சித்தரிப்பில் வண்ணத்தைக் கூட்ட வேண்டியிருக்கும். இந்தத் தரிசனம், சிகப்பு, மஞ்சள் மற்றும் நீலம் என்ற மூன்று அடிப்படை நிறங்களைப் பயன்படுத்துகிறது. அக்கினி நிறம் என்பது சிகப்பு நிறமாயிருக்கும்; சாதாரண அவரை இனச்செடியின்[20] மலர் நீலநிறமானதாக உள்ளது; மற்றும் brimstone என்பது பழைய ஆங்கிலமொழியில் கந்தகத்தின் பெயராயுள்ள இது மஞ்சள் நிறமானதாக உள்ளது. NCV வேதாகமத்தில், "They had breastplates that were fiery red, dark blue, and yellow like sulfur" என்று கூறப்படுகிறது.

குதிரைகளின்மீது ஏறியிருந்தவர்களைவிட குதிரைகள் அதிகமாக கவனத்தை ஈர்ப்பவைகளாய் இருந்தன. யோவான், "குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின் தலைகளைப்போலிருந்தன" என்று கூறினார் (வசனம் 17இ). சிங்கத்தின் அடையாளம் இதற்குமுன்பு பலமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது (4:7; 5:5; 9:8). அதிகாரம் 9ல் பலம் என்பது இதன் முதன்மை அர்த்தமாகக் காணப்படுகையில், தண்டிப்பதற்கு அல்லது அழிப்பதற்கான வல்லமை என்பது துணை மறைவுக்கருத்தாக உள்ளது. சிங்கத்தின் தலையை உடைய குதிரைகள் பலமானவைகளாய் இருந்தன, அவைகள் ஆயிரக்கணக்கானவர்களைக் கொல்வதில் கருவிகளாய் இருக்கும்.

இந்தக் குதிரைகள் அக்கினியைச் சுவாசிப்பவைகளாய் இருந்தன: "அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும் புறப்பட்டன" (வசனம் 17ஈ). உங்கள் சிந்தையில் அக்கினியையும் புகையையும் காண்பதற்கு - மற்றும் கந்தக வாசனையை முகர்வதற்கு - சற்று நில்லுங்கள். கந்தகம் தனது காறலான, அழுகிய முட்டையின் வீச்சத்துடன் எரிவதை முகர்ந்துள்ள எவரும் அதை ஒருக்காலும் மறக்க மாட்டார்.

"அக்கினியும் புகையும் கந்தகமும்" என்பவை கர்த்தரிடத்தில் இருந்து வருகிற தண்டனையைப் போன்றவையாக உள்ளன. சமவெளிகளின் துன்மார்க்கமான நகரங்களைத் தேவன் அழித்தபோது, அவர், "சோதோமின்மேலும், கொமோராவின்மேலும், ... வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி"னார் (ஆதியாகமம் 19:24).[21] சாத்தானைப் பின்பற்றுவதில் விடாப்பிடியாக இருப்பவர்களுக்கு வைக்கப்பட்டுள்ள தண்டனையைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் நமக்கு கூறுகிறது:

> [அவர்கள்] ... பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது (14:10, 11; 19:20; 20:10; 21:8ஐக் காணவும்).

என்னைத் தவறுகப் புரிந்துகொள்ள வேண்டாம்; வெளிப்படுத்தின விசேஷம் 9ன் சிங்கத்தலையுடைய இராட்சத விலங்குகள் அக்கினியும் கந்தகமும் உள்ள கடலைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று நான் கூறவில்லை. இருப்பினும், இவைகள் நரகத்தின் முன்சுவையொன்றை நபர்த்துவப்படுத்துகின்றன என்று கூறுதல் கருத்திற்குப் புறம்பானதாக இருப்பதில்லை, சிலவேளைகளில், மகிழ்ச்சி மற்றும் ஐக்கியத்தின் வேளைகளின்போது நாம், "இது பரலோகத்தின் முன்சுவையாயுள்ளது" என்று கூறுகின்றோம். அதே பாணியில், பயமுறுத்தும் இந்தக் குதிரைகள், நரகம் எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும் என்பதை மாதிரி பார்ப்பதற்கு, மனிதகுலத்தை அனுமதிக்கின்றன.

"அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும், புகையும் கந்தகமும் புறப்பட்டன" என்பது ஒருவேளை மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கலாம். வசனம் 19, "அந்தக் குதிரைகளின் வல்லமை அவைகளுடைய வாயிலே ... இருக்கிறது" என்று கூறுகிறது. இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்ட பட்டயத்தைப் பற்றி நாம் படித்த போது (1:16; 2:16), அது அவரது வாயிலிருந்து புறப்பட்டு வந்தபடியால், அந்தப் பட்டயம் என்பது நியாயத்தீர்ப்பிற்கான அவரது வசனத்தைக் குறித்தது என்று நாம் முடிவுசெய்தோம். இரண்டு சாட்சிகளைப் பற்றி நாம் படிக்கும்போது, அவர்களின் விரோதிகளைப் பட்சிப்பதற்காக அவர்களின் வாயில் இருந்து அக்கினி புறப்பட்டது என்று நாம் காண்போம் (11:5); மீண்டுமாக இது அவர்கள் பிரசங்கித்த செய்தியையே குறிப்பிடுவதாய் இருக்கவேண்டும். பிற்பாடு நாம், வலுசர்ப்பத்தின் (சாத்தானின்) வாயிலிருந்து தண்ணீரின் வெள்ளம் புறப்பட்டு வருவது பற்றியும் (12:15) கிறிஸ்துவின் விரோதிகளினுடைய வாய்களில் இருந்து அசுத்த ஆவிகள் புறப்பட்டு வருவது பற்றியும் (16:13) கவனிப்போம்; இவ்விரு நிகழ்ச்சிகளுமே, பொய்கள், தவறுகள் மற்றும் தேவபக்தியற்ற பிரச்சாரங்கள் ஆகியவற்றைப் பரப்புதல் என்ற பிசாசின் நடைமுறையை எடுத்துரைக்கின்றன.

குதிரைகளின் வாய்களில் இருந்து "அக்கினியும் புகையும் கந்தகமும்" புறப்பட்டன என்ற உருவகமானது, பேசப்பட்ட வார்த்தைகள். நாம் குறிப்பிட்ட "நரகத்தின் முன்சுவை"யின் ஆதாரமூலமாய் இருந்தன என்று மறைமுகமாய் உணர்த்துவதாகக் காணப்படுகிறது. சிங்கத்தலையைக் கொண்ட மிருகங்களின் வாய்களில் இருந்து அக்கினியும் புகையும் ஊற்றப்பட்டது பற்றி நான் வாசிக்கும்போது, எனக்கு யாக்கோபு 3:6 நினைவூட்டப்படுகிறது: "நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம், நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும்

*கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!"*

*இந்த மிருகங்களின் வாய்களில் இருந்து ஊற்றப்பட்ட அழிக்கும் அக்கினியானது, கள்ளப்போதகத்தை உள்ளடக்கும். மனிதகுலத்திற்கு இந்தக் குதிரைகளின் "உண்மையான அச்சுறுத்தல் என்பது அவற்றின் வாய்களில் இருந்து வெளிவந்ததுதான் - அது தேவனிடத்தில் இருந்து மக்களைப் பிரிக்கிற கள்ளப்போதகங்களாக இருந்தது" என்று எல்ட்ரெட் எக்கல்ஸ் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[22] இருப்பினும் நாம், மரணத்தை விளைவிக்கும் அக்கினியை மார்க்கத் தவறு என்பதுடன் சுருக்கிக் கொண்டுவிடக்கூடாது. நமது உதடுகளில் இருந்து நெகிழ்வதற்கு நாம் அனுமதிக்கின்ற கடுமையான, யோசனையற்ற வார்த்தைகள் என்பவை, தவறைப் போதிக்கும்போது நடப்பது போலவே, குறைந்தபட்சம் பல ஆத்துமாக்களைச் சேதப்படுத்துகின்றன அல்லது அழிக்கின்றன.*

*மரணத்திற்கேதுவான இந்தப் போர்குதிரைகளைப் பற்றிய இன்னொரு விபரம் வசனம் 19ல் காணப்படுகிறது: "அந்தக் குதிரைகளின் வல்லமை அவைகளுடைய வாயிலேயும் வால்களிலேயும் இருக்கிறது, அவைகளுடைய வால்கள் பாம்புகளுக்கு[23] ஒப்பானவைகளாயும், தலைகளுள்ளவைகளாயுமிருக்கிறது, அவைகளாலே சேதப்படுத்துகிறது." இந்தக் குதிரைகள் இருமுனைகளிலும் சாவை ஏற்படுத்தும் குணம் கொண்டிருந்தன; இவைகள் போகும்போதும் வரும்போதும் கொலை செய்ய முடியும்![24] அந்தப் பயங்கரமான வால்கள் சுழலுவதை, திரும்புவதை மற்றும் தாக்குவதை நான் கற்பனை செய்கையில், தேள்களின் வால்களைக் கொண்ட வெட்டுக்கிளிகளைப் பற்றி எனக்கு நினைவூட்டப்படுகிறது. அதிகாரம் 9ன் குதிரைகள் ''வளர்ந்த வெட்டுக்கிளிகள்'' என்று அழைக்கப்பட்டுள்ளன.*

*வசனம் 18, குதிரைகள் ஆயுதசாலையினுடைய வீரியத்தை அடிக்கோடிடுகிறது: "அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள்." இம்மூன்று சொல்விளக்கங்கள் ஒவ்வொன்றும் "சிலவற்றை அர்த்தப்படுத்துகின்றன" என்ற கருத்தை ஏற்படுத்த முயற்சி செய்யாதீர்கள். ''வாதைகள்'' என்பது வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்ட யாத்திராகம மொழிநடையாய் உள்ளது,[25] அதேவேளையில் "மூன்று" என்பது, இவ்வாதைகள் தெய்வீக நியாயத்தீர்ப்பைக் குறித்தன என்று மாத்திரம் சுட்டிக்காண்பிப்பதாக உள்ளது.*

*வசனப்பகுதியை எடுத்துரைத்து முடித்துள்ள நிலையில் நாம், பின்னோக்கிச் சென்று, காட்சியை அதன் முழுமையில் காணவேண்டும்.[26] இந்த இருபது கோடிக்குதிரை வீரர்களின் சேனை என்பது உண்மையில் எதைக் குறிக்கிறது?*

*முன்பே குறிப்பிட்டபடி, வெளிப்படுத்தின விசேஷம் 9ன் சேனையானது உண்மையான சேனையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பது சிலருக்கு விருப்பமான விளக்கமாக உள்ளது: எதிர்கால*

*வியலாளர்கள், முதல் நூற்றாண்டின் பார்த்தியர்களின்மீது மையங் கொண்டுள்ளனர், தொடர்-வரலாற்று அணுகுமுறையைப் பரிந்துரைப்ப வர்கள், எட்டாம் மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளின் முஸ்லீம் படைகளைப் பற்றி எழுதுகின்றனர், மற்றும் எதிர்காலவியல்/ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள் பலருக்கு, சீன நாட்டின் படை என்பது தற்காலத்தில் தேர்ந்து கொள்ளப்படும் படையாக உள்ளது. சிலவேளைகளில், குதிரைகளே யுத்தத்தின் ஆயுதங்களாக மேற்கொள்ளப்படுகின்றன: இரண்டாம் உலக யுத்தத்தின்போது, விளக்கவுரையாளர்கள் அக்கினியைச் சுவாசிக்கும் இந்த யுத்த வாகனங்களை (குதிரைகளை) டாங்கிகளுக்கும் தீயெறி கருவிகளுக்கும் ஒப்பிட்டனர். இன்றைய நாட்களில், புலன் உணர்வாளர்கள், பெரும் அழிவை ஏற்படுத்தும் கருவிகளான ஏவுகணைத் தளங்கள் மற்றும் பிறகருவிகளைப் பற்றி குறிப்பிடுவதில் மகிழ்வடைகின்றனர்.*

*இப்போது நீங்கள் அனேகமாக, மேற்கண்ட விபரங்கள், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் நடைக்கும் நோக்கத்திற்கும் சீர்த்தன்மையற்ற வகையில் உள்ளன என்பதை அறியப் போதுமான அளவுக்கு இப்புத்தகத்தைப் பற்றிப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.*[27] *முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் தங்களின் காலத்திலிருந்து நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு நிலவப்போகிற சேனைகளைப் பற்றி - டாங்கிகள், தீயெறி கருவிகள் மற்றும் ஏவுகணைத் தளங்களைப் பற்றிக் குறிப்பிட்டிராத - அர்த்தம் விளங்காத குறிப்புகளினால் எந்த ஆறுதலைக் கண்டிருக்க முடியும்?*

*இதற்கு மறுபுறத்தில், குதிரைகளையும் அவற்றின்மீது ஏறியிருந்தவர்களையும் பொதுவாக யுத்தத்தின் அடையாளத்துவமாக நினைப்பதில் எனக்கு மறுப்பு எதுவுமில்லை.*[28] *கடந்த காலத்தில் தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, உண்மையான சேனைகளை பயன்படுத்தினார் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம்; இதற்குப் பழைய ஏற்பாட்டில் நிறைய உதாரணங்கள் உள்ளன. வல்லமை நிறைந்த ரோமப் பேரரசைக் கீழ்கொண்டுவருவதற்குத் தேவன் வெளியிலிருந்து படையெடுப்பைப் பயன்படுத்தினார் என்பதும் உண்மையாகவே உள்ளது. நமது இந்த நூற்றாண்டில்கூட தேவன் தமது திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் பயங்கரமான யுத்தங்களைப் பயன்படுத்தியுள்ளார். உதாரணமாக இரண்டாம் உலக யுத்தமானது கிறிஸ்துவின் சபைகளின் ஊழிய முயற்சிகளை முடுக்கி விட்டது: யுத்தத்தில் ஈடுபட்டிருந்த பல கிறிஸ்தவர்கள், தாங்கள் போர்புரிந்திருந்த பகுதிகளுக்குச் சுவிசேஷத்தைக் கொண்டு செல்லும் தீர்மானத்துடன் இல்லம் திரும்பினர். யுத்தத்தைப் பொறுத்தமட்டில், உலகம் வன்முறைப் போக்கில் செல்கின்றபடியால் அது, தேவன் அவ்வாறு செய்கின்றார் என்று அர்த்தப்படுவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர் தொடர்ந்து தமது திட்டங்களைச் செயல்படுத்துகின்றார்.*

*இவ்விடத்தில் நான், முன்னெச்சரிக்கையின் வார்த்தைகள் இரண்டைக் கூட்ட விரும்புகின்றேன்: (1) அடையாளத்துவம் என்பது தொலை தூரத்திற்கு வலியுறுத்தப்படாதிருந்தால், இந்தக் குதிரைகளும் இவற்றின்மீது*

ஏறியிருந்தவர்களும் யுத்தத்தின் அடையாளத்துவமென்று நினைப்பதில் எனக்கு மறுப்பு எதுவும் இல்லை. யோவான் "குதிரை வீரர்கள் மற்றும் குதிரைகள் பற்றிய தமது சித்தரிப்பு ... உயர்வான உண்மை நிலையில் ... எடுத்துக் கொள்ளப்பட்டதை அறிந்தால் ... திகைத்திருப்பார் மற்றும் அதை அனேகமாக வேடிக்கையாக நினைத்திருப்பார்" என்று G. R. பீஸ்லே-முர்ரே அவர்கள் விளக்கம் அளித்தார்.[29] வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இந்த விவரிப்பானது நாம் அறிந்த வகையில் உள்ள யுத்த குதிரைகளுக்கோ அல்லது அவ்விஷயத்தில் டாங்கிகள் போன்ற நவீன யுத்தக் கருவிகளுக்கோ பொருத்தமாக முடியாது. இது நேரடி அர்த்தமான சேனையாக உள்ளது என்று உறுதிப்படுத்துதலும் (சீனா போன்ற) சில நாடுகள் இருபது கோடி போர் வீரர்களைக் கொண்டுள்ளதாக உரிமைகோருதலைச் சுட்டிக் காண்பித்தலும், யோவான் தெரிவிக்க நாடுகின்ற செய்தியைத் தவறவிடுவதாக உள்ளது.[30]

(2) அடையாளத்துவம் என்பது உலகியல் சார்ந்த யுத்தத்துடன் சுருக்கிக் கொள்ளப்படாது இருந்தால், இந்தக் குதிரைகளும் இவற்றின்மீது ஏறியிருந்தவர்களும் யுத்தத்தின் அடையாளத்துவமென்று நினைப்பதில் எனக்கு மறுப்பு எதுவும் இல்லை. உலகப்பிரகாரமான யுத்தம் என்பது மனிதனுக்கு மனிதன் காண்பிக்கின்ற மனிதத்துவமற்ற தன்மையின் மாதிரியாக உள்ளது, யுத்தத்தில் ஒன்றுமறியாதவர்கள் துன்புறுகின்றனர் - ஆனுல் இது வாழ்வைப் பொறுத்தமட்டில்(லும்) உண்மையாக உள்ளது.

நான் இந்தப் பாடத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கையில், ஜனவரி '98ற்கான Christian Chronicle[31] என்ற பத்திரிக்கையின் எனது பிரதி வந்து சேர்ந்தது. அந்தப் பத்திரிக்கையின் முகப்புக் கட்டுரை, தீவைக்கும் வன்முறையாளர் ஒருவர், ஓக்லஹாமா கிறிஸ்தவப் பல்கலைக் கழகத்தில் மூட்டிய தீயினால் சுமார் ஆறு கோடியே ஏழுபத்து ஐந்து இலட்சம் ரூபாய்கள் மதிப்புள்ள சேதம் ஏற்பட்டது என்று அறிவித்தது. அந்த அறிவிப்புக்கு நேர்கீழே, கென்ட்டக்கியில் உள்ள படுகா என்ற இடத்தின் உயர்நிலைப்பள்ளியில் ஜெபம் செய்வதற்காகக் கூடியிருந்த மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திய இளைஞன் ஒருவன் பற்றிய செய்தி இருந்தது. அந்தக் குழுவில் இருந்த மூவர் கிறிஸ்துவின் சபையில் உறுப்பினர்களாய் இருந்தனர்.

மேற்கண்டவை போன்ற துன்ப நிகழ்ச்சிகள் தலைப்புச் செய்திகளாகின்றன, ஆனால் ஒவ்வொரு நாளும் பாவம் என்பது மற்றவர்களின் வாழ்வில் செயல்தாக்கத்தை ஏற்படுத்துகிறது; ஒரு மனிதர் இன்னொரு பெண்ணின்மீது கொண்ட ஆசையில் தமது மனைவியை விட்டுப் பிரிகின்றார், அதனால் அவர் தமது குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் பேரழிவுக்கு ஆளாக்குகின்றார். குடிபோதையில் வாகனத்தை ஓட்டும் ஒரு ஓட்டுநர் ஒரு மனிதரையும் அவரது மனைவியையும் கொல்லுகின்றார். அவர்களின் மூன்று பிள்ளைகள்

*பெற்றோர் இல்லாதவர்களாய் விடப்படுகின்றனர். தனது சொந்த வழிமுறையைக் கொண்டிருக்க விரும்புகின்ற ஒரு மனிதர், ஒரு சபைக்குழுமத்தைப் பிரித்து, மனிதர்களைக் கர்த்தருக்குப் புறம்பே இட்டுச் செல்லுகின்றார்.*[32] *நெருப்பு பட்சிப்பதைப்போல் புகை மேற்கொள்ளு வதைப்போல், கந்தகம் தகிப்பதைப்போல், நமது பாவங்களும் பிறருக்குத் தீங்கிழைத்து அழிக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

## *முடிவுரை*

*நமது அடுத்த பாடத்தில் நாம். தேவனுடைய எச்சரிக்கைகள் தரப்பட்டிருப்பினும், மனிதகுலம் மாற்றமற்றதாக நிலைத்திருந்தது என்பதைக் காண்போம்:*

> *அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவுமாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டு மனந்திரும்பவுமில்லை, தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை (9:20, 21).*

*உங்கள் சொந்த இருதயம் இதைப்போன்று மிகவும் கடினப் பட்டதாயிருப்பதில்லை என்று நான் நம்புகின்றேன். நீங்கள் இன்னும் அடையப்படக் கூடியவராய் இருக்கமுடியும்படி நான் ஜெபிக்கின்றேன் உங்கள் பாவங்களில் இருந்து நீங்கள் மனந்திரும்ப வேண்டியிருந்தால் - உங்களுக்காகவும் நீங்கள் நேசிக்கின்றவர்களுக்காவும் - அதை இன்றே செய்யுங்கள்.*[33] *பாவம் என்பது மற்றவர்களின் வாழ்வில் பயங்கரமான செயல்விளைவைக் கொண்டிருக்க முடியும், [அவ்வாறே அது] கொண்டுள்ளது!*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*நீங்கள் இந்தப் பாடத்தைப் போதித்தால் அல்லது பிரசங்கித்தால், "எக்காளங்கள் என்பது எச்சரிப்பதற்காக!" என்ற வரைவட்டவணையை மறுகண்ணோட்டம் இடுவதற்கு நேரம் எடுத்துக் கொள்ள விரும்பலாம்.*

*"நரகத்தில் இருந்து குதிரை வீரர்கள்" மற்றும் "தலைகளோ அல்லது வால்களோ, [எதைச் சந்தித்தாலும்] நீங்கள் [உங்கள் வாழ்வை] இழந்து போவீர்கள்!" என்பவை இந்தப் பாடத்திற்கான மாற்றுத் தலைப்புகளில் உள்ளடங்குகின்றன.*

*குறிப்புகள்*

[1]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 188. *[2]யாத்திராகமம் 37:25 தூபப்பீடத்தின் கொம்புகள் பற்றிக் கூறுகிறது. இவைகள் அந்தப் பீடத்தின் உச்சிப்பகுதியின் விரிவாக்கங்களாய் இருந்தன. இறைவெளிப்பாட்டு இலக்கியங்களில் கொம்பு என்பது பொதுவாக பலத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. ("வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் 5:6க்கான குறிப்புகளைக் காணவும்.) "பொற்பீடத்தின் நான்கு கொம்புகளின்" மீது, பலிசெலுத்தப்பட்ட விலங்குகளின் இரத்தம் சிலவேளைகளில் வைக்கப்பட்டது என்ற உண்மையினாலும் இது முக்கியத்துவமானதாக இருக்கலாம் (லேவியராகமம் 4:7). [3]ஐப்பிராத்து நதிக்கரையில் இருந்த தூதர்கள் பின்பு அவிழ்த்துவிடப்பட்டனர், இது அவர்கள் எங்கு வேண்டுமென்றாலும் செல்ல விடுதலையாய் இருந்தனர் என்பதைக் குறிப்பிடுகிறது. [4]எக்காளத்தைக் கொண்டிருந்த தூதன், தான் அறிவித்த செயலில் ஈடுபடுதல் என்பது இவ்விடத்தில் மாத்திரம் காணப்படுகிறது.* [5]See Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 159. [6]G. R. Beasley-Murray, *The Book of Revelation*, The New Century Bible Commentary Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 164. [7]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 235. [8]*The Simple English™ Bible, International Edition* (Dallas: International Bible Foundation, 1980). *[9]8:7-12ல், "பூமியில் மூன்றில் ஒரு பங்கு எரிந்து போயிற்று'' (முதலாம் எக்காளம்)* [இது தமிழ் வேதாகமத்தில் இல்லை], *"சமுத்திரத்தில் மூன்றில் ஒரு பங்கு இரத்தமாயிற்று'' (இரண்டாம் எக்காளம்), ''தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கு எட்டியைப்போல் கசப்பாயிற்று'' (மூன்றும் எக்காளம்), மற்றும் "சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றில் மூன்றில் ஒரு பங்கு சேதப்பட்டது" (நான்காம் எக்காளம்). [10]தூதர்களின் இரு குழுக்களும் ஒன்றே என்று நம்புவதற்குக் காரணம் எதுவும் இல்லாதிருக்கையில், அவர்கள் அவ்வாறில்லை என்று நம்புவதற்குக் காரணங்கள் பலவற்றை நாம் கொண்டுள்ளோம்: அதிகாரம் 7ன் தூதர்கள் கட்டுப்படுத்துதலைச் செய்திருக்கையில், அதிகாரம் 9ன் தூதர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். மேலும் இவ்விரு குழுக்களும் வெவ்வேறு இடங்களில் இருந்தனர்.*

*[11]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில், "நான்கு" என்ற எண்ணின் அடையாளத்துவ முக்கியத்துவம் பற்றிய விளக்கங்களைக் காணவும்.* [12]M. Robert Mulholland, Jr. *Revelation: Holy Living in an Unholy World*, Francis Asbury Press Commentary, gen. ed. M. Robert Mulholland, Jr., (Grand Rapids, Mich.: Francis Asbury Press, 1990), 198. [13]"Morph" *என்பது "உருவகத்தை அல்லது வடிவத்தை மாற்றுதல் என்று அர்த்தப்படுகிற metamorphosis என்ற கிரேக்க வார்த்தையின் சுருக்கமான வடிவமாக உள்ளது. கடந்த காலங்களில், திரைபடங்களில் இவ்வித மாறுதல்கள் படநிழல் கட்டமைவை நிறுத்தும் செய்முறையினால் நிறைவேற்றப்பட்டது, இது குலுங்கக் கூடியதாக இருக்கும். நவீன* "morphing" *புதுமையானது கணனிகளினால் நிறைவேற்றப்படுகிறது.* [14]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation*, The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 98-99. [15]Summers, 158-59. [16]Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 143. [17]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 202. [18]"The riders" *என்ற சொற்றொடர் மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டுள்ளது. குதிரையில் ஏறியிருந்தவர்களுக்கா, குதிரைகளுக்கா அல்லது இருவருக்குமா, யாருக்கு*

*மார்க்கவசம் அணிவிக்கப்பட்டிருந்தது என்பது பற்றி மூலவசனத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. பார்த்தியர்களின் சேனையில், குதிரைகளும் குதிரையில் ஏறியிருந்தவர்களும் மார்க்கவசங்கள் அணிந்திருந்தனர். [19]''நிறம்'' என்ற சொற்றொடர் மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டுள்ளது. சிலர் "அக்கினி" போன்ற மற்றும் புகைபோன்ற மார்க்கவசங்கள் என்று மாத்திரம் நினைப்பதை விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர். [20]*"Hyacinth" [*அவரை இனச் செடி*] *என்பது கிரேக்க வசனத்தின் நேரடித் தரவமைப்பாக உள்ளது. இவ்வார்த்தை, நீல நிறத்தில் உள்ள ஒரு மாணிக்கக் கல்லையும் அர்த்தப்படுத்தக்கூடும். (இதே வார்த்தையானது 21:20ல் நீலநிற மாணிக்கக் கல்லை குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.)* KJV *வேதாகமத்தில் அதிகாரம் 9 மற்றும் 21 ஆகிய இரு இடங்களிலும்* "jacinth" *என்றுள்ளது. இவ்வார்த்தை நீலநிறத்தின் இருண்ட சாயலை மாத்திரம் குறிக்கவும் கூடும். 9:17ன் கடைசி பகுதியானது* "hyacinth" *என்பதற்கு பதிலாக* "smoke" *என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது, எனவே நாம் அனேகமாக இந்த நிறம் புகைபோன்ற நீலநிறமாயிருந்தது என்று காணவேண்டும்.*

*[21]பழைய ஏற்பாட்டில் இந்தச் சொற்றொடர்களின் பயன்பாட்டிற்கான சிறந்த உதாரணங்களுக்கு சங்கீதம் 11:6; ஏசாயா 34:9, 10; எசேக்கியேல் 38:22 ஆகிய வசனங்களைக் காணவும். [22]*Eldred Echols, *Haven't You Heard? There's a WAR Going On!: Unlocking the Code to Revelation* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 180. *எக்கல்ஸ் அவர்கள், ஒரு குறிப்பிட்ட குழுவின் கள்ளப்போதனையைத் சிந்தையில் கொண்டிருந்தார். [23]பாம்புகளுக்கு ஒப்பான வால்கள் என்பது "சாத்தான் என்று சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்துடன்" உள்ள சில இணைவை மறைமுகமாய்க் குறிப்பிடுவதாக இருக்கலாம் (12:9). [24]பார்த்தியக் குதிரை வீரர்கள் தங்களின் விரோதிகளை நோக்கி முன்னேறுகையில், அவர்களை நோக்கி சரமாரியாக அம்புகளை எய்தனர், மற்றும் அவர்கள்* [*விரோதிகள்*] *பின்வாங்கிச் செல்லுகையில் அவர்களின் குதிரைகளினுடைய வால்களின்மீது மீண்டும் ஒருமுறை சரமாரியாக அம்புகளை எய்தனர் என்றும் விளக்கவுரையாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது வசனம் 19ன் உருவகத்தின்மீது செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம் அல்லது செலுத்தாதிருக்கலாம். [25]''வெளிப்படுத்தின விசேஷம், 1'' என்ற புத்தகத்தில் "ஆண்டவரே, எதுவரைக்கும்" என்ற பாடத்திலும், அத்துடன், இந்தப் புத்தகத்தில் "தேவனுடைய எழுப்புதல் அழைப்பு" மற்றும் "பாவத்தின் சுய அழிவுத்தன்மை" என்ற பாடங்களிலும் காணவும். [26]இந்தப் பாடத்தை நீங்கள் ஒரு வகுப்பில் எடுத்துரைத்தால், இவ்வேளையில் நீங்கள், சேனையின் தரிசனம் பற்றி உங்கள் மாணவர்களின் முற்றான மனப்பதிவைக் கேட்டல் என்பது தகுதி வாய்ந்ததாயிருக்கும். [27]ரோமப்படைகளை ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் தோல்வியடையச் செய்திருந்த பார்த்தியர்களின் படையெடுக்கும் சேனைத்தொடர்பான விளக்கம் என்பது சாத்தியக்கூறுள்ள விதிவிலக்காக உள்ளது. [28]இந்தச் சேனையை நீங்கள், இரண்டாம் முத்திரை உடைக்கப்பட்ட போது விடுவிக்கப்பட்ட சிகப்பு நிறக் குதிரையுடன் ஒப்பிட்டுப்பார்க்க விரும்பலாம் (6:3, 4). ''வெளிப்படுத்தின விசேஷம், 2'' என்ற புத்தகத்தில் ''இடிமுழக்கக் குளம்பொலிகள்" மற்றும் "வியப்பெதுவும் இல்லை!" என்ற பாடங்களைக் காணவும்.* [29]Beasley-Murray, 166-67. [30]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 595.

[31]The *Christian Chronicle என்பது கிறிஸ்துவின் சபைகள் தொடர்பான செய்திகளை அறிவிக்கும் உலகளாவிய செய்தித்தாள் ஆகும். [32]இந்தப் பாடத்தை நான் வகுப்பில் பயன்படுத்தும்போது, ஒரு நபரின் பாவம் மற்றவர்களின்மீது எதிர்மறைச் செயல்தாக்கம் கொண்டிருத்தல் எவ்வாறு என்பது பற்றி மற்ற உதாரணங்களை*

*மாணவர்களிடம் கேட்பதுண்டு. மற்ற பல நல்ல உதாரணங்கள் தரப்பட்டன. [33]இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், உங்கள் உரையைக் கேட்பவர்களிடத்தில், கர்த்தருக்குப் பதில் செயல் செய்வதற்கு அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பது பற்றிக் கூறுங்கள். இந்தப் புத்தகத்தில் காணப்படும், "தேவனுடைய எழுப்புதல் அழைப்பு" மற்றும் "பாவத்தின் சுய அழிவுத்தன்மை" ஆகிய பாடங்களின் முடிவுரையைக் காணவும்.*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *வேதாகமத்தில் ஐபிராத்து நதி குறிப்பிடப்பட்டுள்ள காலங்கள்பற்றி ஒரு ஆய்வைத் தரவும். யூதர்களுக்கு மற்றும் ரோமர்களுக்கு இந்த நதியின் முக்கியத்துவம் என்னவாக இருந்தது?*
2. *"ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும்" என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன (9:15)?*
3. *''இருபதுகோடி'' என்ற அடையாளத்துவ எண்ணின் அர்த்தம் என்ன?*
4. *குதிரைகளையும் அவற்றின்மீது ஏறியிருந்தவர்களையும் விவரிக்கவும் - மற்றும் அவற்றின் பல்வேறுபட்ட சாத்தியமான அர்த்தங்களைப் பற்றிக் கலந்துரையாடவும். மிகமுக்கியமாக, விவரிப்பை நீங்கள் வாசிக்கையில், நீங்கள் பெறுகின்ற முற்றான மனப்பதிவு என்ன?*
5. *குதிரைகளின் வாய்களில் இருந்து அக்கினியும் புகையும் வந்தது என்ற உண்மையின் சாத்தியமான முக்கியத்துவம் என்ன?*
6. *இந்தப் பாடமானது மற்றவர்களின் வாழ்வில் பாவத்தின் செயல்விளைவுக்குப் பல உதாரணங்களைக் கொடுக்கிறது. கூடுதலான உதாரணங்களை உங்களால் நினைக்க முடிகிறதா?*



*“நரகத்திலிருந்து குதிரைவீரர்கள்*
*(மற்றும் குதிரைகள்)” (9:16-19)*